3. கவன ஈர்ப்பு

(அ) தமிழ்நாட்டில் ஒசூரிலும், மற்றும் சில பகுதிகளிலும் சட்ட விரோதமாக 'ஒரு நம்பர் பரிசுச் சீட்டுகளை விற்பனை செய்வது குறித்து.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினை இத்துடன் முடிகிறது. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திருமதி கே. மரியம் உல் ஆசியா மற்றும் திரு. கே. செல்வராஜ் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திருமதி கே. மரியம் உல் ஆசியா.

*திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தர்மபுரி மாவட்டம் ஒசூரிலும், தமிழ் நாட்டில் சில பகுதிகளிலும் சட்டவிரோதமாக 'ஒரு நம்பர்' பரிசுச் சீட்டுகளை விற்பனை செய்வது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட, அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாட்டில் ஒசூர் மற்றும் பல இடங்களில் ஒரு நம்பர் லாட்டரி சீட்டுகள், பிற மாநில அரசுகளால் அனுமதி வழங்கப்பட்டு தனியாரால் நடத்தப்படுகின்றன. இது சம்பந்தமாக சட்டமன்ற உறுப்பினர் திருமதி மரியம் உல் ஆசியா, எழுப்பிய கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு கீழ்க்கண்டவாறு பதிலளிக்கப் படுகிறது :—

தமிழ்நாடு பரிசுச்சீட்டுத் திட்டம் மறைந்த முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களால் 15-8-1968 அன்று துவக்கப் பட்டது. இத்திட்டம் 1975-ம் வருடம் நிறுத்தப்பட்டு சிறிது இடைவெளிக்குப் பிறகு மீண்டும் 1976-ம் வருடம் ஆகஸ்டு மாதம் தொடங்குவதற்கு உத்தரவிடப்பட்டது. அன்று முதல் தமிழக அரசு பரிசுச்சீட்டு தமிழ்நாடு அரசினால் இடைவிடாது நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் நிகர வருவாயில 75 சதவிகிதம் குடிநீர் வசதி, பொருளாதார அடிப்படையில் நலிவடைந்த மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் போன்ற மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்குப் பயன்படுத்

தப்படுகிறது. லாட்டரிச் சீட்டுகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். (1) அரசு நடத்தும் லாட்டரிகள் (State Organised lotteries (உ-ம்.) 6 (2) அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் நடத்தும் லாட்டரிகள் (State Authorised Private lotteries) (உ-ம்) 11 மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ராகி அவர்கள் அனைத்து முதலமைச்சர்களுக்கும் எழுதியுள்ள கடிதத்தில் ஒரு நம்பர் லாட்டரி திட்டத்தில் நடக்கும் முறைகேடுகளை கட்டுப்படுத்த தக்க நடவடிக்கை எடுக்குமாறுக் கோரியுள்ளார். தமிழகத்தைப் பொறுத்தவரை, ஒரு நம்பர் பரிசு திட்டம் எதுவும் நடத்தவில்லை. ஆனால் பல்வேறு வடமாநிலங்கள் தனியாருக்கு அனுமதி வழங்கி (Authorised Lotteries) ஒரு நம்பர் லாட்டரி சீட்டு குலுக்கலை நடத்துகின்றன. ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும் (Only one Pressing) எண்ணிலிருந்து ஆறு எண்களில் முடியும் எண்களுக்கு முதல் பரிசு (Six digits), ஐந்து எண்களில் முடியும் எண்களுக்கு (Five digits) இரண்டாம் பரிசு, நான்கு எண்களில் முடியும் எண்களுக்கு (Four degits) மூன்றாம் பரிசு, மூன்று எண்களில் முடியும் (Three degitis) எண்களுக்கு நான்காம் பரிசு. இரண்டு எண்களில் (two degits முடியும் எண்களுக்கு ஐந்தாம் பரிசு, கடைசி ஒரு எண்ணில் (Last single digit) முடியும் எண்ணுக்கு ஆறாவது பரிசுகள் என்று வழங்குவதால்தான் பல்வேறு முறைகேடுகள் நடைபெறுகின்றன. இந்த கடைசி ஒரு நம்பரில் பல்வேறு இடங்களில் சூதாட்டம் போல் நடத்தப்படுகின்றன. இதனால், ஏழை எளியவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஏழை எளியவர்களை அந்த மாயையிலிருந்து விடுவிப்பதற்கு ஒரு நம்பர் லாட்டரி சீட்டுகள் விற்பனையைத் தடைசெய்வது ஒன்றே சிறந்ததாகும். ஆனால், அரசியல் சாசன அமைப்பின்படி மாநில அரசுகள் தடை செய்வதற்கு அதிகாரம் இல்லை.

புற்றீசல் போல் தோன்றி பல குறைபாடுகளுடன் அரசு அங்கீகாரம் பெற்று நடத்தப்படும் தனியார் லாட்டரி சீட்டு விற்பனையை கட்டுப்படுத்தும் நோக்குடன், அரசு ஆணை எண் 1101/நிதி (ப.சீ.) நாள் 6—10—1989 தேதிய ஆணையில் பிற மாநில அரசுகளால் அங்கீகாரம் செய்யப்பட்டு, தனியாரால் விற்பனை செய்யப்படும் லாட்டரிகளை தடை செய்தது. மேலும் அரசு கடித எண் 59482/நிதி (ப.சீ)/89-7 நாள் 13-2-1990 -ன்படி மாநில அரசுகளால் அங்கீகாரம் செய்யப்பட்டு கீழ்க்கண்ட அரசே நடத்தும் லாட்டரிகளின் விற்பனையை மட்டும் அனுமதித்தது. தமிழ்நாடு, கர்நாடகா, மகாராஷ்டிரா, கேரளா, மேற்கு வங்காளம், உத்திரப்பிரதேசம்.

இதனை எதிர்த்து கொடுக்கப்பட்ட வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் தமிழ்நாடு அரசாணையை தனது 4–5–1990 தேதிய தீர்ப்பில் உறுதி செய்தது. பாதிக்கப்பட்டவர்கள் உயர்நீதி மன்றத்தில் டிவிஷன் பெஞ்சில் மேல் முறையீடு செய்தனர். மேல் முறையீட்டை தள்ளுபடி செய்து உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் அரியானா மற்றும் ராயல் கவர்ன்மென்ட் ஆப்

பூட்டான், லாட்டரிச்சீட்டுகளின் விற்பனையை பேங்க் கியாரண்டி அளித்து விற்பனை செய்யலாமெனக் கூறியுள்ளது. இதனையும் எதிர்த்து பிறமாநிலங்களால் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. தமிழக அரசின் உத்தரவு உச்சநீதிமன்றத்தால் செப்டம்பர் 1990-ல் நிறுத்தி வைக்கப்பட்டது. அந்தத் தடை உத்திரவின் பேரில் கீழ்க்கண்ட மாநில லாட்டரிச்சீட்டுகள் தமிழ் நாட்டில் விற்பனை செய்யப்படுகின்றன. டில்லி உச்சநீதிமன்ற ஆணையின்படி விற்பனைக்கு அனுமதிக்கப்படுபவை. அஸ்ஸாம், இமாசலபிரதேசம், கோவா, சிக்கிம், நாகாலாண்டு, அருணாசலப் பிரதேசம், மிசோராம், டில்லி நிர்வாகம், மணிப்பூர்.

மேற்சொன்ன வழக்குகளை உச்சநீதிமன்றம், மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 1994 ஏப்ரல் 21ஆம் நாளிட்ட தன் இடைக்கால உத்தரவின்படி, செப்டம்பர் 1990-ல் நமது அரசு ஆணையின் மீது ஏற்கனவே விதித்த இடைக்காலத் தடை உத்தரவை நீக்கி ஆணை பிறப்பித்துள்ளது. இந்த இடைக்கால உத்தரவின்படி, மற்ற மாநில அரசுகளால் நேரடியாக நடத்தப்படாத (not organised) பரிசுச் சீட்டுகள், தமிழ்நாட்டில் விற்பனை செய்வது, மே 5, 1994 முதல் தடைசெய்யப்படும். உச்ச நீதிமன்றம், இந்த இடைக்கால உத்தரவில் அரசால் நேரடியாக நடத்தப்படும் (State Organised lottery) பரிசுச் சீட்டுகளைத் தீர்மானிப்பதற்கு வகை செய்யும் பல்வேறு விதிமுறைகளையும் அறிவித்துள்ளது. லாட்டரிச் சீட்டில் முறைகேடுகளை கட்டுப்படுத்துவதில் இந்தியாவிலே நமது மாநிலந்தான் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக உள்ளது. அந்த உத்தரவிற்கிணங்க இனி வருங்காலத்தில் தமிழ்நாட்டில் விற்பனை செய்யப்படும் பிற மாநிலங்களால் நடத்தப்படும் லாட்டரி சீட்டுகள் விற்பனை ஒழுங்கு படுத்தப்படும்.

இது சம்பந்தமாக எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்டக் கண்காணிப்பாளர்களுக்கு பரிசுச்சீட்டு இயக்குநரின் நே.மு.க. எண் 5377/91—83, நாள் 5—2—1994-ல் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசால் நடத்தப்படும் லாட்டரிகள், உயர்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட லாட்டரிகள் மற்றும் உச்ச நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட லாட்டரிகள் தவிர மற்றவைகள்மீது ஐ.பி.சி. 294ஏ-ன்படி நடவடிக்கை எடுக்குமாறு கூறப்பட்டுள்ளது. இது சம்மந்தமான மேல் விவரங்களை தமிழ்நாடு அரசு உள்துறை மூலமாக பெறலாம். ஒரு நம்பர் லாட்டரி சீட்டின் விற்பனை ஏழை எளியோரை பாதிப்பதால், சமீபத்தில் மத்திய அரசு இது சம்பந்தமாக விரிவான கடிதம் ஒன்றை எல்லா மாநில அரசுகளுக்கும் மேற்படி ஒரு நம்பர் பரிசுச்சீட்டில் நடைபெறும் முறைகேடுகளை களையுமாறு அறிவுறுத்தியுள்ளது இக்கடிதத்தில் கூறப்பட்ட ஆலோசனையின்படி, ஏழை எளிய மக்களின் நலன் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1994 மே 3

மேலும் தற்போதுள்ள நிர்வாக உத்திரவுக்கு பதிலாக (Executive Order) சட்ட முன் வடிவு ஒன்று கொண்டுவர தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இது லாட்டரிகளில் நடைபெறும் முறைகேடுகளை கட்டுப்படுத்த பெரிதும் உதவும்.

தமிழ்நாட்டில் விற்பனை செய்யப்படும் அனைத்து பரிசுச் சீட்டுகளின் மீது 3.6 சதவிகிதம் விற்பனை வரி, முதல் விற்பனையின் பேரில் வசூல் செய்யப்படுகிறது. தமிழநாடு பரிசுச்சீட்டுகளுக்கும் துறையின் மூலம் மேற்படி விற்பனை வரி செலுத்தப்படுகிறது. இது பிற மாநில பரிசுச்சீட்டுகளின் விற்பனையைக் கண்காணிப்பதற்கும், வரி ஏய்ப்பினை தடுப்பதற்கும், பொது மக்களின் நலனைக் காப்புதற்கும் உதவுகிறது. பிற மாநிலங்களில் இது போன்று விற்பனை வரி வசூலிக்கப்படுவதில்லை.

* திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நம்பர் லாட்டரி சீட்டுகளுடைய மோகத்தில் ஈர்க்கப்பட்டு சிலர் 20 ஆயிரம் 30 ஆயிரம் ரூபாய்க்கு ஒரே நாளில் பரிசுச்சீட்டுகளை வாங்குகிறார்கள். இன்று இந்த எண்ணுக்கு பரிசு விழும் என்று அவர்கள் நினைத்தால் நகரில் இந்த பரிசு சீட்டு விற்பனை செய்யும் அனைத்துக் கடைகளுக்கும் சென்று பரிசு சீட்டுகளை வாங்குகிறார்கள். இப்படி ஆயிரக் கணக்கில் ரூபாய் கொடுத்து வாங்கும் பரிசு சீட்டுகளுக்கு பரிசு விழாமல் போனால் முதல் நாள் விட்ட பணத்தை எடுத்துவிட வேண்டும் என்ற ஆசையில் மீண்டும் பணத்தைக் கொட்டுகிறார்கள். அடுத்தும் பரிசு விழவில்லை என்றால் சிலர் கடனாளியாகி விடுகிறார்கள். சிலர் தற்கொலைவரை போய்விடுகிறார்கள். இதனால் பல குடும்பங்கள் கஷ்டப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இப்படி சூதாட்டம் போல் சட்டவிரோதமாக நடத்தக்கூடிய ஒரு நம்பர் லாட்டரியின் முறைகேடுகளைக் களைவதற்கு மக்கள் நலனில் அக்கறை கொண்ட தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உடனடி நடவடிக்கை எடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவர அறிக்கையில் கூறியபடி தற்போதுள்ள நிர்வாக உத்தரவுக்குப் பதிலாக சட்ட முன்வடிவு கொண்டு வர ஏற்பாடு செய்வதற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சட்டமுன்வடிவை விரைவில் கொண்டு வருவதற்கும் பரிசு சீட்டுகளில் நடக்கும் முறைகேடுகள் மற்றும்மோசடிகளை தடுப்பதற்கும் கண்காணிப்பதற்கும் ஒரு கமிட்டி அமைப்பதற்கும் பொதுமக்கள் மற்றும் விற்பனையாளர்கள் கருத்துக்களை கேட்டறிந்து பரிசு சீட்டுகளின் விற்பனையை ஒழுங்குபடுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலேயே தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, எந்தெந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைப்

பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தடை உத்தரவின் பெயரில் இந்த ஒரு நம்பர் பரிசுச் சீட்டுகளை தடைப்படுத்துவதற்கு ஆங்காங்கே நடவடிக்கைகள் எடுப்பதற்கு நிர்வாக உத்தரவுவெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால் நிர்வாக உத்தரவு மட்டும் போதாது என்ற காரணத்தால் சட்ட முன்வடிவு கொண்டு வருவதற்கு தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. விரைவில் இதைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். இதற்கென்று ஒரு தனி கமிட்டி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் கூறுகின்றபோது தமிழகத்தில் இதுபோன்று ஒரு நம்பர் லாட்டரிச் சீட்டுகளை தமிழக அரசு நடத்தவில்லை என்று அறிவித்திருக்கிறார்கள். வெளி மாநிலங்களில் ஒரு சில மாநிலங்களில் தனியாருக்கு ஒதுக்கி லாட்டரி சீட்டுகளை நடத்துவதற்கு ஒப்பந்த அடிப்படையில் அவர்களுக்கு ஆண்டுக் கணக்கில் விடுவதால் அவர்கள் லாப அடிப்படையில் இப்படிப்பட்ட தவறான லாட்டரி சீட்டுகளை அதாவது ஒரு நம்பர் பரிசு சீட்டுகளை தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் விற்பனை செய்கின்றபோது மற்ற மாநிலங்களும், தமிழக அரசும் முறையாக செயல்படுத்துகின்ற லாட்டரி சீட்டுகளை விட இப்படிப்பட்ட லாட்டரிச் சீட்டுகளை வாங்குவதில் அதிக கவனம் செலுத்தி வருவாயை இழக்கிறார்கள். அப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் அந்த லாட்டரி சீட்டுகள் தமிழகத்தில் விற்பனை ஆகாமல் இருப்பதற்கு தடை விதித்தும், முறையாக அரசு நடத்துகின்ற சீட்டுகள் மட்டும்தான் இங்கே விற்கவேண்டும் என்ற ஒரு கட்டுப்பாட்டை விதித்தும், தனியார் மற்ற மாநிலங்களில் ஒப்பந்த அடிப்படையில் விற்கும் அந்த லாட்டரி சீட்டுகளுக்கு தடை விதித்தும் தமிழகத்தில் இருக்கின்ற அரசு லாட்டரி சீட்டுகள் மற்றும் மற்ற மாநில அரசுகள் நடத்தும் சீட்டுகள் மட்டும் தான் விற்க வேண்டும் என்ற ஒரு ஆணையைப் பிறப்பிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-50

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டே பிற மாநிலங்களுடைய லாட்டரி சீட்டுகள் தமிழகத்தில் விற்கக் கூடாது என்ற முறையில் நம்முடைய அரசின் சார்பாக ஒரு ஆணை வெளியிடப்பட்டது. அந்த ஆணையை எதிர்த்து சில மாநிலங்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததன் காரணமாக உச்ச நீதிமன்றம் தடையாணை பிறப்பித்து விசாரணை முடிகின்றவரையில் அவர்கள் விற்பதற்கு ஆட்சேபணை இல்லை என்று சொல்லி வந்தது; 1990 ஆவது ஆண்டு அவர்கள்

தடை ஆணை விதித்தார்கள். அதற்குப் பிறகு இப்போது அண்மையிலே உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. அந்தத் தீர்ப்பிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிபிட்டதுபோன்று, தெளிவாகவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இனிமேல் லாட்டரிச் சீட்டுகள் அடிக்க வேண்டுமென்றால், அந்தந்த மாநில அரசுகள் நேரடியாக, மாநில அரசுகள் தான் அடிக்க வேண்டும். மாநில அரசுகள்தான் விற்பனைக்கான உரிமை முழுவதையும் பெற வேண்டும். வேண்டுமென்றால் விற்பனை செய்வதற்கு அவர்கள் ஏஜெண்டுகளை அமைத்துக் கொள்ளலாம். ஆனால், குலுக்கலை மாநில அரசேதான் நடத்த வேண்டும். பரிசுத் தொகை எவ்வளவாக இருந்தாலும், மாநில அரசேதான் நடத்த வேண்டும். ஆகவே, மாநில அரசு தான் முழுப் பொறுப்பும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படிப் பட்ட மாநிலங்களுடைய லாட்டரிச் சீட்டுகள் வேண்டுமானால் வரலாமே தவிர, அந்தந்த மாநிலங்கள் தனிப்பட்ட ஏஜெண்டுகளை நியமித்து முழு அதிகாரத்தைத் அவர்களிடத்திலே கொடுத்நது அச்சடிப்பது முதற்கொண்டு, குலுக்கல் நடத்துவது முதற்கொண்டு தனி ஏஜெண்ட்கள் நடத்துவதற்கு இனிமேல் இடம் கிடையாது என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே தனியாரோடு அந்த ஒப்பந்தங்கள் செய்துகொண்டு, லாட்டரி சீட்டுகளை விற்கின்ற அளவுக்கு இடம் கொடுத்த சிக்கிம், மிசோராம், நாகலாந்து, அருணாச்சலபிரதேஷ், கோவா, கேரளா ஆகிய மாநிலங்களுடைய லாட்டரிச் சீட்டுகள் நுழைவதைத் தமிழக அரசு தடுக்கலாம் என்று மத்திய அரசு இப்போது ஆணை பிறப்பித்து இருக்கிறது. இந்தத் தடையாணை 5-5-1994 வரையில் இருக்கும் என்றும், 5ஆம் தேதிக்குப் பிறகு, தடை ஆணை நீக்கப்பட்டு விடுகிறது நடவடிக்கை எடுக்கலாம் என்றும் இப்போது உத்தரவு போட்டு விட்டதன் காரணமாக, இனிமேல் பிற மாநிலங்களிலிருந்து லாட்டரி சீட்டுகள் வர வேண்டுமானால் அந்தந்த மாநில அரசுகளுடைய முழு பொறுப்போடுதான் வர வேண்டும். அதுமட்டுமல்லாமல், உச்ச நீதிமன்றம், பரிசுகள் பெறுவதற்கு யாரும் முன் வராமல் இருந்தாலோ அல்லது பரிசுகள் கொடுக்கப்படாத சூழ்நிலை ஏற்பட்டாலோ அந்தப் பரிசுத் தொகை முழுவதும் மாநில அரசையே சேரலாம் என்றும் ஒரு ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள் அதிலே. இந்த ஆணைப்படி இனிமேல் நடவடிக்கை எடுக்கின்றபொழுது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்ற குறைபாடுகள் நிகழ்வதற்கு வழி ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.